## வீடு: 01 – வெடியரசன் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

சுமார் பத்து வருடங்களாக எமது வீட்டின் முன் பக்கத்தில் பீலி அமைத்து அதன் மூலம் வரும் மழைநீரை எமது கிணற்றில் நீருக்கு மேலே விட்டு வருகின்றோம்.

இதனால் எமது கிணறு பங்குனி சித்திரை வரை முறையான மலை மாரி ககாலத்தில் பெய்யுமானால் நாம் உடுப்புகள் தோய்த்தல் மற்றும் குளித்து முழுகுதல் போன்றவற்றிற்காக எமது கிணற்று நீரை பயன்படுத்தி வருகிறோம். பங்குனி சித்திரை மாதங்களிற்கு பின்னர் எமது கிணற்று நீர் உவர் நீராக மாறுகிறது.





**வீடு: 02 – வெடியரசன் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)**

எனது வீட்டின் முன் பக்கத்தில் பீலி அமைத்து அதன் மூலம் வரும் மழைநீரை எனது வீட்டில் உள்ள பூங்கன்றுகள் மற்றும் உடுப்புகள் சலவை செய்வதற்கு பாவித்து வருகின்றேன். எனது வீட்டிற்கு பீலி அமைத்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகின்றது. எனது வீட்டில் கிணறு உள்ளது. இனிவரும் காலங்களில் மலை நீரை கிணற்றிற்குள் விடுவதற்கு முயற்சி எடுப்பேன்.










**வீடு: 03 – பொன்னம்பலம் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)**

சுமார் மூன்று வருட காலமாக எமது வீட்டின் முற்பக்கத்தின் ஒரு பகுதியில் மாத்திரம் பீலி அமைத்து அதன் மூலம் வரும் மழைநீரை எமது கிணற்றின் நீரிற்கு மேல் விட்டு வருகின்றோம். மாரி காலத்தில், அதாவது கார்த்திகை மார்கழி மாதங்களில், கணிசமான மழை கிடைக்குமாக இருந்தால் அடுத்த வருட நடுப்பகுதி வரை எமது கிணறு புடவைகள் சலவை மற்றும் நாம் குளித்து முழுகுதல் போன்றவற்றிற்கு சவர்க்காரம் சம்போ நுரைக்கும் வகையில் நன்னீராக காணப்படும். மிகுதி முற்பக்க பீலியை நாம் அமைக்காமைக்கான காரணம் கஞ்சல் விழுவதனால் தண்ணீர் நிறம் மாறிவிடும் என அச்சத்தால் ஆகும். எமது வீட்டில் மாமரம் நிற்பதால் அதன் இலைகள் மற்றும் பூக்கள் மாங்காய்கள் போன்றவை சீற்றின்மேல் விழுந்து கஞ்சல் வருவது போன்ற காரணத்தினால் மிகுதி முற்பக்க பீலி அமைக்கமுடியாமல் இருப்பதை கூற விரும்புகிறேன்.









வீடு: 04 – பொன்னம்பலம் வீதி (J/48 காரைநகர் மத்தி - சிவகாமியம்மன் கோவிலடி)

இரண்டு வருடங்களாக வீட்டின் முற்பக்கத்தில் மாத்திரம் பீலி அமைத்து அதன் மூலம் வரும் மழைநீரை கிணற்றின் நீரிற்கு மேலே விட்டு வருகின்றோம். முறையான மலை மாரி காலங்களில் ஒவ்வொரு வருடமும் கிடைக்குமானால் அடுத்த வருட சித்திரை வரை எமது கிணற்று நீர் நாம் உடுப்புகள் சலவை செய்தல் குளித்தல் போன்ற எமது செயற்பாடுகளுக்கு ஏற்ற உவர் இல்லாத நன்னீராக காணப்படும். பின்னர் படிப்படியாக உவர்நீராக காணப்படும்.









**<u>வீடு: 05 – விக்காவில் (J/48 காரைநகர் மத்தி)</u>**

எமது வீட்டில் இரண்டு பக்கத்திற்கு மட்டும் பீலி அமைத்து அதனூடாக வரும் மழைநீரை நேரடியாக நேரடியாக கிணற்றிற்குள் விடாமல் எமது வீட்டின் முன்பக்கத்தோடு இணைந்தவாறு தொட்டி ஒன்று அமைத்து அத்தொட்டிக்குள் மழைநீரை விட்டு பின்னர் வடிகட்டி கிணறு சற்று தூரத்தில் இருப்பதால் நீர் பைப்பின் மூலம் கிணற்றின் நீரின் மேலே விட்டு வருகின்றோம். எமது கிணறு வெட்டிய காலம் தொடக்கம் சற்று உவர் நீராகவே காணப்பட்டது. ஆனால் நாம் பீலி பொருத்தி மழைநீர் விட்டு தற்போது 15 வருடங்கள் ஆகின்றது. நாம் எமது கிணற்றுக்குள் மழைநீர் விட்டு மூன்று நான்கு வருடங்களில் எமது கிணற்று நீர் முற்றுமுழுதாக உவர் நீர் அற்ற நீராக அதாவது நன்னீராக காணப்படுகிறது. ஆனால் குடிப்பதற்கு உகந்தது அல்ல. ஆனால் சோறு சமைத்துப் பார்த்தோம் சோறு சிவப்பு நிறமாக வருகின்றது அதனால் சோறு சமைப்பதில்லை. **இருப்பினும் எமது அன்றாட பாவனைக்கு குளித்தல் உடுப்பு சலவை செய்தல் பூங்கன்றுகள் தென்னைமரங்கள் போன்றவற்றிற்கு வருடத்தின் எல்லா மாதமும் எமது கிணற்று நீரை நாம் பயன்படுத்துவது எமக்கு மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகும்.**











